JL
T15m21, N36(A.
N36. 1·3
147639.

[பகுதி 3

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாது௵ வைகாசி௴
MAY, 1936

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதுருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் வி[illegible]

# பொருளடக்கம்


1. அனுபவம் வாய்ந்த கிராம ஆசான் ... ... 65
—Rev. M. G. கோல்ட், M. Sc., ஆம்பூர்.

2. ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எண் இடவேலை ... 71
—எஸ். ஜகந்நாதன்

3. சிசு போஷண பாடசாலை ... ... 82

4. விளையாட்டிலும் படிப்பு ... ... 86

5. கல்விச் செய்தியும் குறிப்பும் ... ... 87

6. ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் சதாம்ச விவரமும் ... 90

7. தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி ... 91

8. பத்திராதிபர் குறிப்பு ... .... 92

9. ரக்ஷணைப்படம் ... .... ...


## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷோல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

தொகுதி 1] 1936ளு மே மீ [பகுதி 3

## அனுபவம் வாய்ந்த கிராம ஆசான்*

[Rev. M. G. கோல்ட், M. Sc., ஆம்பூர்]

ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008

நான் கிராம ஆசானைப் பற்றிப் பேச முன் வந்ததற்குக் காரணம் உங்களில் பெரும்பான்மையோர் கிராம பாடசாலைகளில் தொழில் புரி[illegible]லாம் என்பதே. கிராம பாடசாலை உயர்தரக் கல்விக்கி அடிப்படையாயிருந்தாலும், இந்தியாவில் பெரும்பான்மையோர் அப்பாடசாலையைக் கடந்து உயர்தரக் கல்வியை நாடுவதில்லை. படிப்பில்லாததால் குழந்தைகளென்றே பலரைக் கொள்கிறோம். ஆகவே, இத்தேச மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஆவதற்குக் கல்வி மிகவும் அவசியம் என்பதில் ஐயமே யில்லை. இந்நோக்கம் தற்கால திட்டப்படித் திகழும் கல்லூரியினாலாவது, உயர்தரக் கல்வியினாலாவது கைகூடாது. அடுத்த தலைமுறையினர், பொதுவாக ஆரம்பப் பாடசாலைகளின் உதவியால், அதிலும் முக்கியமாக கிராம பாடசாலையின் உதவியால் தான், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆக இயலும். நான் இவ் விஷயங்களைப்பற்றி என் முகவுரையில் விஸ்தரிப்பதின் காரணம் கிராம ஆசிரியர்களாகிய நீங்கள் வகிக்கும் ஸ்தானம் எவ்வளவு பொறுப்பு வாய்ந்தது என்பதையும், நீங்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களாகத் திகழ்வது எவ்வளவு அவசியமானது என்பதையும் வற்புறுத்துவதற்காகவே.

முதலாவது, நீங்கள் கிராம வாசிகளுடன் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும்; கிராம வாசிகளின் சச்சரவுகளில் தலையிட்டுக்கொண்டு அவர்களுடன் ஒருவனாய் வீண் காலம் கழிப்பவர் உண்மையான ஆசிரியரல்லர். அதுபோலவே படித்த காரணத்தால் கிராம வாசிகளுக்கு மேம்பட்டவர் என்றெண்ணி அவர்களை இகழ்பவரும் உபாத்திமைத் தொழிலிற்கு அருகரல்லர். ஆகவே, நிதான நடுநிலையிற் செல்வதே உங்கள் கடமையாகும். அந் நடுநிலைமை யாதென்பதை நீங்களே அனுபவத்தில் அறிவீர்கள். மற்றொரு விஷயமும் உங்களுக்கு அனுபவத்தில் தெரியவரும்; அதாவது: நீங்கள்

* இராணிப்பேட்டை போதனு முறை பாடசாலை ஆசிரிய மாணவர் சங்கத்தில், நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

147639
சென்னை-600 008



உங்கள் பாடசாலை யிருக்கும் ஊர் ஜனங்களினிடையில் வசித்தாலன்றி, ஆசிரியத் தொழிலைச் செவ்வனே நடத்த இயலாது.

ஆசிரியர்களாகிய் நீங்கள் கிராம வாசிகளிடையில் வசிப்பது மாத்திரம் போதாது. உங்களைச் சுற்றிலும் காணப்படும் விஷயங்களைக் கவனித்து, நீங்கள் கிராம வாசிகளுக்கு எவ்விதத்தில் உதவிபுரியக் கூடுமென அறியவேண்டும். விவசாய விஷயமாக நீங்கள் பயிற்சி பெற்றிருந்தாலொழிய, குடியானவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி நீங்கள் யோசனை சொல்ல எண்ணுவது பயனற்றதாகும். ஆனால், வேறு முக்கியமான துறைகளில் நீங்கள் அவர்களுக்கு உதவி புரியக்கூடும். ஒவ்வொரு ஜன சமூகத்திலும் வெவ்வேறு கஷ்டங்கள் தோன்றலாம். முதலாவது, கிராம ஆரோக்கிய நிலைமையையும் சுகாதாரத்தையும் கவனிப்போம். அருகாமையிலுள்ள வைத்தியருடன் நீங்கள் கலந்து கொள்வீர்களானால், அவர் உங்களுக்கு அரசாங்கத்தார் வெளியிடும் ஆரோக்கியம் சம்பந்தமான படங்களை எங்கிருந்து எப்படிப் பெறலாமென்று சொல்வதோடு, நீங்கள் கிராமத்தார்களுக்கு இவ் விஷயமாய் உதவிபுரியக் கூடிய பல மார்க்கங்களையும் எடுத்துக் காட்டுவார். தற்சமயத்திலுங் கூட சில குக்கிராமங்களில் மாணவர்கள் தங்கள் ஆசிரியரின் கீழ் நின்றுகொண்டு, சாக்கடை நீர் வழிந்தோடித் தங்கும் இடங்களில் கோடிக் கணக்கான கொசுக்கள் உற்பத்தியாவதைக் கிராமத்தார்களுக்குக் காட்டி வருகிறார்கள். இதற்குச் செய்யவேண்டிய பரிகாரம், கும்பியை வெளிப்படுத்தி வெயிலில் பரப்பிவிட்டு, அது இருந்த விடத்தில் சாலையைப் போடுவதே. இம்மாதிரியே கொசு பெருகக்கூடிய மற்ற நீர் நிலைகளையும் தேடிச் செய்தால், கொசு குறைந்து மலேரியா சுரம் நீங்குவதைக் கிராமத்தார்கள் உணராமல் இருக்க முடியாது. ஆரோக்கிய சம்பந்தமான விஷயங்களில் நீங்கள் உதவி புரியக்கூடிய வழிகளில் இது ஒன்றே யாகும்.

கிராமத்தில் நோய், தொத்து வியாதி இவை பரவும் காலங்களில் கிராம ஆசான் ஓர் உண்மைத் தலைவனாக விளங்கலாம். ஊசிகுத்த வரும் உத்தியோகஸ்தர்களும், வாந்திபேதி நிவாரண உத்தியோகஸ்தர்களும் முதல் முதலாக கிராம ஆசானின் துணையை நாடுவதை நான் என் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். சரியான ஆரோக்கிய இலாகா அதிகாரிகள் ஒரு கிராமத்தில் தொத்து வியாதியைப் போக்கத் தலைப்பட்டவுடன், ஏற்ற பலன் கட்டாயம் ஏற்படும். இச்சமயங்களில், கிராம ஆசான் காருண்யமான இவ்விஷயத்தில் ஈடுபட்டு உதவி புரிந்தால், தன் செல்வாக்கை நிச்சயமாய்ப் பெருக்கிக் கொள்வான். நோய் காணும் சமயத்தில் சரியான வைத்தியரை நாடும்படி ஜனங்களைத் தூண்டுவதும், தொத்து வியாதி தோன்றியதும் ஆரோக்கிய இலாகா அதிகாரிகளுக்குத் தெரிவித்து அவர் உதவியைப் பெறுவதும் இன்னும் உத்தமமான கடமையாகும். தமது சொற்ப சம்பளத்தில், உபயோகமுள்ள லேகியம், மாத்திரைகள் இவற்றை வாங்கி வைத்துக்கொண்டு, முதலிலேயே வைத்தியரை நாட அஞ்சுவோர்களுக்கு அவற்றைத் தந்துதவி சௌக்கியம் செய்துவரும் ஆசிரியர்களை நான் கண்டுள்ளேன்; அவர்களோடு

TISm21,



நான் உழைத்துமுள்ளேன். இவர்களில் ஒருவர் வாந்திபேதி தோன்றும் சமயத்தில் சர்க்கார் வைத்திய சாலையிலிருந்து மருந்து வாங்கி வைத்துக்கொண்டு, வாந்திபேதி கண்டவர்களுக்குத் தாம் தனியாகவே உதவிபுரிந்து சௌக்கியம் செய்துள்ளார். இவ்வாசிரியர் ஜனங்களிடம் பெற்றிருக்கும் பெயரையும் புகழையும் நீங்கள் பார்ப்பீர்களாயின், அவருக்குப் பின் வருபவர் ஜனங்களோடு அவ்வளவு பற்றில்லாவிட்டால் அங்கு வேலைசெய்து பெயரெடுப்பது கடினமென்பது உங்களுக்கே தெரியவரும். முக்கியமாக, 200 அல்லது 300 வீடுகளடங்கிய கிராமங்களில் நீங்கள் வேலை செய்ய நேர்ந்தால், நீங்கள் இவ்வாசிரியர்களைப் போல் ஜனங்களின் மதிப்பையும் கௌரவத்தையும் பெறும் வண்ணம் நடந்துகொள்வது அவசியமாகும்.

இரண்டாவது, கிராம வாசிகளின் நன் மதிப்பைப் பெறுவதோடு உங்கள் மானேஜர்கள், இன்ஸ்பெக்டர்கள் இவர்களோடு சரிவர கூடித் கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். போதனாமுறை பாடசாலையிலிருந்து வெளியேறிய நீங்கள் புது அபிப்பிராயங்கள் உள்ளவர்களாகவும், பலவிதமான புதிய உபகரணங்களை விரும்புகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ் வுபகரணங்களைப் பெற்று அவற்றை நன்கு உபயோகித்தால், பரீக்ஷாதிகாரிகளின் நன்மதிப்பை நீங்கள் பெறுவீர்கள். ஆனால், புது அபிப்பிராயங்களும், உபகரணங்களும செலவை அதிகரிப்பவை. உபகரணங்களில் அதிகமாகப் பணம் செலவிட விரும்புகிறீர்களென்று உங்கள் மானேஜர்கள் தெரிந்து கொள்வார்களானால், நீங்கள் அவர்களின் அதிருப்திக்குள்ளாவீர்கள். ஓர் அதிகாரியின் அதிருப்திக்குள்ளாகியே மற்றொருவரின் நன் மதிப்பைப் பெறவேண்டுமென நீங்கள் எண்ணலாம். ஆனால், இது உண்மையல்ல. அனுபவம் வாய்ந்த ஆசிரியன் தனக்கு இயல்பாயுள்ள திறமையை உபயோகித்து அனைவரையும் திருப்தி செய்ய முயலுவான். இதற்கும் பல உதாரணங்கள் கொடுக்க இயலும். மரவேலையில் பயிற்சியே பெறாத ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சில ஆயுதங்களும், சாதுர்யமும் உண்டு. அவர் சாதாரண ஜாதிக்காய்ப் பலகையைக் கொண்டு சிறிய படம் தாங்கிகள் தயாரித்துள்ளார். அவர் தமது மானேஜரிடமிருந்து கொஞ்சம் சாணித்தாள் வாங்கிக்கொண்டு, நாளடைவில் பூகோள படங்கள், சாதாரண படங்கள், கதைப் படங்கள் இவற்றைத் தயாரித்து, நீங்கள் பூகோள படங்களைத் துணியில் ஒட்டிவைப்பது போல் ஒவ்வொரு வகைப் படங்களையும் தனித் தனியாக ஒட்டிவைத்திருக்கிறார். ஜாதிக்காய்ப் பலகை, பழைய சைகிலின் சக்கரக் கம்பிகள் இவற்றைக் கொண்டு மணிச் சட்டம் தயாரித்திருக்கிறார். இவ்வாசிரியருக்கு ஒரு நாற்காலி, மேஜை, சில அச்சு பாரங்கள், கொஞ்சம் வஸ்துக்கள் மாத்திரமே மானேஜர் கொடுத்தால் போதும். ஒவ்வொரு உபகரணமும் அவசியத்தினாலும் அனுபவத்தினாலும் தோன்றி, உபயோகத்திற்கு ஏற்றதா யிருக்கிறது. இத்தகைய ஆசிரியர் வேண்டுமென மானேஜர்கள் ஆவலாய்த் தேடுகிறார்கள்; பரீக்ஷாதிகாரிகள் இவரைப் போற்றி உற்சாகப்படுத்துகிறார்கள். பண நெருக்கடியிலிருக்

கும் தம் மானேஜர் கட்டிக்கொண்டிருக்கும் புதுக் கட்டிடத்தின் கூரைக்கு இவ்வாசிரியர் வேண்டிய மரச் சாமான்களைத் தயாரித்து வருகிறாரென்றும் நான் உங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

உங்கள் மானேஜரின் மனத்திற் கிசைந்து நீங்கள் நடக்கவேண்டுமென்பதை அறியவேண்டும். உங்களுக்குத் தெரியாத பல கஷ்டங்கள் அவருக்கு இருக்கலாம். ஆனால் தமது நிலைமையை யுணர்ந்து அநுதாபம் காட்டித் தம் பாடசாலையைச் செல்வாக்கு மிகுந்ததாயும், உயர்நிலை யுள்ளதாயும் செய்ய ஆசிரியர் ஒத்துழைக்கிறா ரென்பதை மானேஜர் அறிவாரானால், அவர் சிக்கனமாயிராமல் தாராளமாகவே யிருப்பார் என்பதை நீங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

பரீக்ஷாதிகாரிகளும் ஆசிரியரின் உண்மைத் தோழர்களாகவே பொதுவாக இருப்பார்கள். பல ஆசிரியர்களோடு அவர்கள் பழகுவதால், உங்கள் கஷ்டங்கள் உங்களுக்குத் தெரிந்ததைவிட அதிகமாக அவர்களுக்குத் தெரியும். கெட்டிக்காரர்களாயும், உங்கள் குறைகளையும் தவறுகளையும் மறைக்கும் சுபாவமில்லாதவர்களாயும், பரீக்ஷாதிகாரியை மோசஞ்செய்ய முயலாதவர்களாயும் நீங்கள் இருப்பீர்களானால், கடுமையானவரெனக் கருதப்படும் பரீக்ஷாதிகாரிகூட உங்கள் நேயராகி உங்களுக்கு உதவி புரிவார்.

இவற்றை யெல்லாம் ஆலோசிப்பதின் நிமித்தம் உங்கள் தொழிலை மறவாதிருக்க, நீங்கள் ஆசிரியர்களென்றும் உங்கள் வேலை மாணவர்களைக் கவனிப்பதென்றும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களோடு பழகுவதில் கூட நீங்கள் அனுபவம் வாய்ந்தவர்களாய் நடந்துகொள்ள வேண்டும்.

சாதாரண புத்தியுள்ளவர்களும் கூட ஒன்று அல்லது இரண்டு வருஷ காலம் போதனா முறை பயின்ற பின் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டிய பாட முறைகளைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். தவிர, பாடசாலை அமைப்பு, ஒழுங்கு, சுகாதாரம் இவற்றின் முக்கியமான விதிகளையும் நீங்கள் அறிந்துகொண்டிருக்க வேண்டும். தம்மிடம் ஒப்படைத்திருக்கும் மாணவர்களுக்கு, கேவலம் ஏட்டுப் படிப்பு கற்பிப்பதோடு நில்லாமல், அவர்களைப் பரந்த நோக்கமுள்ளவர்களாகச் செய்கிற திறமை வாய்ந்த ஆசிரியர் குருட்டுத்தனமான வழியை அனுஷ்டிக்க மாட்டார்.

நீங்கள் உங்கள் வேலையை அதிக மேன்மையாகச் செய்வதற்கு ஒத்தாசையாய் இருக்கக்கூடிய சில அபிப்பிராயங்களை இப்போது சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தினசரிப் பத்திரிகை இல்லாவிட்டாலும் ஒரு வாரப் பத்திரிகையையாவது தவறாமல் படிக்கவேண்டும். இதற்கு உங்கள் தாய் பாஷையில் பிரசுரமாகும் பத்திரிகையே ஏற்றது. உங்கள் கிராமம், ஜில்லா, தேசம், உலகம் இவற்றை யொட்டிய முக்கியமான சமாசாரங்களை நீங்கள் மாணவர்களுக்குத் தினமும் எடுத்துச் சொல்ல வேண்டும்.



இந்நோக்கம் கைகூடுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. சமீபத்திலிருக்கும் இரண்டு மூன்று ஆசிரியர்கள் சேர்ந்து சந்தா போட்டுக்கொண்டு ஒரு தமிழ் பத்திரிகையைத் தருவிக்கலாம். மற்றொரு வழி இதைக் காட்டிலும் சிறந்தது. அது உயர்ந்த வகுப்புகளிலுள்ள பிள்ளைகள் சேர்ந்து ஒரு பத்திரிகையைத் தருவிப்பது. இருபத்தைந்து மாணவர்களுள்ள ஒரு வகுப்பில் இதன் நிமித்தம் ஏற்படும் செலவு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு அரை பைசாவாகும். இப்படிப் பத்திரிகை வாசிக்கும் மாணவர்கள், அதன் அவசியத்தை உணர்ந்து, அப்போதைக் கப்போது விஷயங்களை விரிந்த நோக்கத்தோடு கூடிய தங்கள் ஆசிரியர்களின் கீழ் நின்று கவனித்து பிறர்க்கு உதவி செய்யும் நோக்கமுள்ளவர்களாய் இருப்பார்கள். எதிர்காலத்தில் குடியாயிருக்கப் போகும் சிறுவர்களுக்கு இத்தகைய சுயநோக்க முயற்சியைவிட ஏற்ற சாதகமில்லை.

கல்வி அதிகாரிகளால் வற்புறுத்தப்படும் இது போன்ற மற்றொரு அபிப்பிராயமுமுண்டு. அதாவது, பொது அறிவைப் பெருக்குவது. பொது அறிவை ஒரு பாடமாகக் கற்பிக்க இயலாது என்பது உண்மையாயிருக்கலாம்; அவ்வறிவைப் புகட்டுவதற்கும் ஒரு ஏற்ற திட்டம் இல்லாவிடின் ஒன்றும் நடைபெறுவது இல்லையென்பதும் உண்மையே. இக்காலத்தில் இவ்விஷயங்களைப்பற்றிப் பல புத்தகங்கன் ஆங்கிலத்தில் வெளியாகின்றன. ஆனால், அவற்றை வாங்கி வைப்பதற்குப் பாடசாலை நிலயங்களுக்குக் கூட கஷ்டமா யிருக்கிறதென்றால், நீங்கள் படித்தறிவதற்குக் கடினமாயிருக்கக்கூடிய அப்புத்தகங்களைத் தனிமையாகவே வாங்குவது அசாத்தியமாகும். ஆயினும் உங்களுக்கு இத்தகைய விஷயங்களைத் தகுந்தமாதிரி தாய் பாஷையில் எழுதப்பட்டுள்ள மலிவான புத்தகங்கள் தேவை. இது விஷயத்தில் உங்களுக்குள்ள ஆவலை நீங்கள் வெளியிட்டீர்களானால், உங்களுக்கு உபயோகமாகக் கூடிய விஷயங்களைப் புத்தகங்களும் பத்திரிகைகளும் உங்களுக்குத் தந்து உதவுமென்று நான் திண்ணமாய்ச் சொல்லக் கூடும்.

உல்லாசப் பிரயாண மூலமாகவும் பொது அறிவைப் பெருக்கலாம். இத்தகைய பிரயாணங்களைப் பற்றி நீங்கள் அதிகமாகக் கேட்டிருப்பீர்கள், சிலவற்றில் கலந்து கொண்டும் இருப்பீர்கள்; சிறிது கற்றுக்கொண்டு மிருப்பீர்கள். ஆனால், தம் மாணவர்களுக்கு அவர்கள் பார்த்திராத தபால் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், ரயில்வே ஸ்டேஷன் முதலியவற்றைக் காட்டுவதற்காக அவர்களை ஏழு மைல் தூரத்திலுள்ள ஒரு பெரிய பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு சனிக்கிழமை முழுதும் அதில் செலவழிக்கும் ஆசிரியன், தம் மாணவர்களின் நன்மதிப்பைப் பெறக்கூடும். அவர்கள், தாங்கள் உல்லாசமாகக் காலம் கழிக்கும்போதே கற்றுக்கொள்ளுமாறு அவர்களுடன் சாதுர்யமாக நடந்து கொள்வார்.

ஆசிரியரது தொழிலைப் பற்றின வாழ்க்கையில் கூட அனுபவம் வாய்ந்த நோக்கம் பயனுள்ளதா வென்பதை யறிய அதைச் சிறிது கவனிப்

போம். போதனா முறை பயிலும் காலத்தில் விஷயங்களை அறிந்துகொண்ட போதிலும், அனுபவத்தில் நாளடைவில் தெரிந்து கொள்ளும் விஷயங்கள் பல உண்டு. கற்க ஆரம்பிக்கு மொருவன் ஞானத்தைப் பெரும் பழக்கத்தை மாத்திரமடைந்தவனாவான். இதை ஆசிரியர்கள் உணராத காரணத்தினால் தான் கல்வி அதிகாரிகள் அவர்களைக் கூட்டி அறிவைப் பெருக்குவதற்கு வழி தேடுகிறார்கள்.

இந்த அவசியத்தை, ஆசிரியர்கள் தாமாகவே உணர்ந்திருக்க வேண்டும். "ஒன்று பட்டால் வாழலாம்" என்பதையும், ஆசிரியர்கள் ஒன்று கூடினால் பெரிய காரியங்களையும் செய்யக்கூடு மென்பதையும் ஆசிரியர்களாகிய நீங்கள் நன்றாக உணர வேண்டும். உங்களுக்குள் சகோதரத்துவம் ஏற்பட்டு நீங்களெல்லோரும் ஒரே பொது நோக்கத்திற்கு உழைப்பதற்கு இன்றியமையாத தொழில் வலிமையை கொடுக்கக்கூடிய ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றி நான் அழுத்தமாய்ச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக, கல்வியைப் பற்றிய பிரசார சம்பந்தமாய் உங்களுக்கு இருக்கவேண்டிய நோக்கத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கட்டாயக் கல்வியைக் கொஞ்சங் கொஞ்சமாக பரவச்செய்வதற்கு அரசாங்கத்தார் தினம் தினமும் முயன்று வருகிறார்கள். இது பெருந்தன்மையான முயற்சியே; ஆனால், நாளைக்கு ஆசிரியர்களாக அமர இருக்கும் நீங்கள் தேசத்தில் கல்வி யுணர்ச்சி யென்பதை மூட்டினாலொழிய அது அசாத்தியமான காரியமாகும். உங்களைப் பார்த்து மற்றவர்கள் கற்க வேண்டுமென்று ஆவலுள்ளவர்களாக ஆகும்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். உங்கள் மாணவர்கள், காந்தம் ஊசியை யிழுப்பதுபோல், படிக்கும் வயதுள்ள மற்றவர்களைப் பாடசாலைக்கு வரும்படிச் செய்யக் கூடியவர்களா யிருக்கவேண்டும். இப்படிச் செய்வதால் நீங்கள் நீடுழிகாலம் உங்கள் தாய் நாட்டிற்கு நிரந்தரமான நன்மையைச் செய்பவர்களாவீர்கள். இதோடு நிதர்சனமான நன்மையும் உங்களுக்கு உடனே கிட்டும். இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு உத்தியோகம் கிடைப்பது கடினமாயிருந்து வருகிறது. உத்தமமான தொழிலெனப்படும் இத்தொழில் மனிதர் நிறைந்ததாயுள்ளது. உங்களுக்கு உத்தியோகம் கிடைப்பது கடினமாயிருந்தால், நீங்கள் பாடசாலையில்லாத ஊர்களுக்குச் சென்று, அனுபவ நிதர்சனமான கல்வியைப் பரப்பி, சொந்தத்திலேயே ஒரு பாடசாலையை ஸ்தாபித்துக் கொள்ளலாம்.

ஆசிரியராக இருங்கள்! அது உத்தமமான தொழில்! ஆனால் அநுபவம் வாய்ந்த ஆசிரியராக இருங்கள்.

JL
TISM21, N24 PA
N34.1.2
147639
சென்னை-600 008

# ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எண் இடவேலை.

எஸ். ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

(*All rights Reserved*)

(42-ம் பக்கத் தொடர்ச்சி.)


தினசரி சம்பவங்களில் நடக்கும் விஷயங்களையே பள்ளிக்கூடத்தில் நாம் கணித போதனைக்குச் சாதனமாக எடுத்துக் கொள்ள வேண்டும். முன்பு ஒருதரம் குறிப்பிட்டு எந்தப் பதினாறு சந்தர்ப்பங்களில் நாம் கணித ஞானத்தை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தேன். மேல் ஒரு விஷயத்தைக் குறித்து பாஷையோ, கணிதமோ, பொது அறிவோ, நாளாக நாளாக வயது, அனுபவம் இவற்றிற்க் கேற்றபடி அபிவிருத்தியடைந்து வருகிறது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நாம் "பிராஜெக்ட் முறை" என்ற ஒருவித முறையைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். அந்த முறைப்படி ஒரே ஒரு விஷயத்தைக் குறித்த பலவித ஞானத்தைப் பிள்ளைகள் தமது அனுபவத்திலிருந்தே பார்த்தல், செய்தல், படித்தல் மூலமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். நான் சொல்லிய 16 சந்தர்ப்பங்களையும் 16 பிராஜெக்ட் என்றே வைத்துக் கொள்ளலாம். தற்சமயம் ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு அதன் மூலமாகக் கணித ஞானத்தைப் படிப்படியாக அபிவிருத்தி செய்வது எப்படி என்று விளக்கிக் காட்டுகிறேன்.

## கோயில் உற்சவமும் அதைப் பற்றின பலவித கணக்குகளும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பிள்ளைகள் ஆங்காங்கு நடக்கும் கோயில் உற்சவங்களைப் பார்த்து வருகிறார்கள். அக்காலத்தில் பொது அறிவு சம்பந்தமாகவும் கணித ஞான சம்பந்தமுமான பல விஷயங்களைப் பார்க்க நேரிடுகிறது. அவர்கள் யானை மீது குழந்தைகளை ஏற்றி வைப்பதைப் பார்த்திருக்கிறார்கள். ரங்க ராட்டினத்தில் காலணா கொடுத்து ஏற்றி சுற்றி வந்து களித்திருக்கிறார்கள். பல்லக்கு, விமானம், வாகனங்களில் சுவாமியை அலங்கரித்து வைத்துத் தூக்கிச் செல்லுவதைப் பார்க்கிறார்கள். பல ஊர் கோயில்களின் கோபுரங்களைப் பார்த்திருக்கிறார்கள். தேர்க்கடை, திருநாள்கடை, முதலியவற்றைப் பார்க்க அவர்களுக்கு மிக உற்சாகம் உண்டு. தெப்ப உற்சவம் நடக்கும் காலத்தில் குழந்தைகள் தாய் தகப்பன்மார்களுடன் குளத்தைச் சுற்றிப் போகிறதுண்டு. இவ்வாறு ஏற்படும் பலவித அனுபவங்களைக் கணித பாடத்தில் அமைத்துக் கணக்குப் போட முடியும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். ஒவ்வொன்றிற்கும் உதாரணமாக சிற்சில கணக்குகளை அடியில் சேர்த்திருக்கிறேன்.

வகுப்பு 3.

நீங்கள் கோயில்களிலுள்ள கோபுரத்தைப் பார்த்திருக்கிறீர்கள். அவைகள் மிகவும் உயரமானவை. இங்கே சில கோபுரங்களின் உயரம் எவ்



வளவு அடி என்று சொல்லியிருக்கிறேன். * அதைப் படித்து இங்குள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

| | | உயரம் அடி |
|---|---|---|
| காஞ்சீபுரம் ஏகாம்பரேச்வரர் கோயில் கோபுரம் | ... | 188 |
| காஞ்சீபுரம் வரதராஜ ஸ்வாமி கோயில் கோபுரம் | ... | 100 |
| ஸ்ரீ ரங்கம் கீழ கோபுரம் | ... | 147 |
| திருவாரூர் கீழ கோபுரம் | ... | 118 |
| திருவாரூர் மேல கோபுரம் | ... | 101 |
| ராமேச்வரம் மேல கோபுரம் | ... | 78 |
| சிதம்பரம் வடக்கு கோபுரம் | ... | 140 |
| தஞ்சாவூர் கோயில் விமானம் | ... | 216 |
| கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில் கோபுரம் | .... | 130 |
| பூரி ஜகந்நாத சுவாமி கோயில் கோபுரம் | ... | 192 |

கேள்விகள்.

1. எது மிகவும் உயர்ந்தது ?

2. எது மிகவும் தாழ்ந்தது?

3. மிகவும் உயர்ந்தது, அதைவிடச் சற்றுத் தாழ்ந்தது, அதையும் விடச் சற்றுத் தாழ்ந்தது..................கடைசியாக எல்லா வற்றையும்விட அதிகத்தாழ்ந்தது என்று வரிசைப்பட சொல்லு.

4. அடியிற் காட்டிய மூன்றில் எது எவ்வளவு அதிக உயரம் ?

1. தஞ்சாவூர் கோயில் விமானம், காஞ்சீபுரம் ஏகாம்பரேச்வரர் கோயில் கோபுரம்.

2. ஸ்ரீரங்கம் கீழ கோபுரம், பூரி ஜகந்நாத சுவாமி கோயில் கோபுரம்.

---

* டாக்டர் பெர்கூஸன் "இந்திய சிற்பம்" என்ற புஸ்தகத்திலுள்ள அளவுகள் ஆகும்.




3. திருவாரூர் மேல கோபுரம், திருவாரூர் கீழ கோபுரம்.

5. அடியிற் காட்டிய இரண்டில் எது எவ்வளவு தாழ்ந்த உயரம் ?

(1) ராமேச்வரம் மேல கோபுரம் சிதம்பரம் வடக்கு கோபுரம்.

(2) கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில் கோபுரம். காஞ்சீபுரம் வரதராஜ ஸ்வாமி கோயில் கோபுரம்.



6. ஒரு தீவட்டிக்கு 2 முகமாக

5 தீவட்டிகளுக்கு எத்தனை முகம்?

6 ,, ,,

3 ,, ,,

8 ,, ,,

ஒரு தீவட்டிக்கு 5 முகமாக

3 தீவட்டிகளுக்கு எத்தனை முகம்?


2 ,, ,,


4 ,, ,,

7 ,, ,,

ஒரு பல்லக்கை ஒரு பக்கம் தூக்க 3 பேர் வேண்டும். 2 பக்கமும் தூக்க எத்தனை பேர் வேண்டும்?

ஒரு பல்லக்கை ஒரு பக்கம் தூக்க 5 பேர் வேண்டும். 2 பக்கமும் தூக்க எத்தனை பேர் வேண்டும்?





ஒரு விமானத்தை ஒரு பக்கம் தூக்க 2 பேர் வேண்டும். 4 பக்கமும் தூக்க எத்தனை பேர் வேண்டும்?

ஒரு பெரிய விமானத்தைத் தூக்க மொத்தம் 35 பேர் வேண்டுமானால்,

4 விமானங்கள் தூக்க எத்தனை பேர் வேண்டும் ?

ஒரு சிறு விமானம் தூக்க 4 பேர் வேண்டுமானால்,

29 விமானங்கள் தூக்க எத்தனை பேர் வேண்டும் ?

| வாகனங்கள் | ஒரு பக்கம் தூக்க ஆட்கள் | 4 பக்கமும் எத்தனை ஆட்கள்? |
|---|---|---|
| கருட வாகனம் | 15 | |
| விருஷப வாகனம் | 16 | |
| யானை வாகனம் | 17 | |
| கைலாஸ வாகனம் | 18 | |
| பூத வாகனம் | 12 | |
| நந்தி வாகனம் | 14 | |
| மயில் வாகனம் | 12 | |

வகுப்பு 4.

## சம்பாஷணை



ரங்க ராட்டினம்

கோயில் உற்சவ காலங்களில் ரங்க ராட்டினத்தில் பல பிள்ளைகள் உட்கார்ந்து சுற்றிவந்து சந்தோஷப்பட்டிருப்பார்கள். அதிக நேரம் அதில் சுற்றினால் சிலருக்கு மயக்கம் வருவதுண்டு ரங்க ராட்டினக்காரன் இதிலிருந்து தான் சம்பாதித்து வயிறு பிழைக்கிறான். ஒரு சமயத்தில் 20, 25பேர் உட்காரலாம். ஒரு தினத்தில், 30,40 தரம் சுற்றுவான். ஆளுக்கு ஒரு தடவை உட்கார காலணா சார்ஜ் செய்வான்.

| | |
|---|---|
| 17 பேர் உட்கார எவ்வளவு சார்ஜ்? | |
| 21 | ,, |
| 19 | ,, |
| 24 | ,, |
| 18 | ,, |

ஒரு தடவை 0-3-6 வசூல் ஆனால் எவ்வளவு பேர் உட்கார்ந்திருந்தார்கள் ?
ஒரு தடவை 0-5-6 வசூல் ஆனால் எவ்வளவு பேர் உட்கார்ந்திருந்தார்கள் ?
ஒரு தடவை 0-6-6 வசூல் ஆனால் எவ்வளவு பேர் உட்கார்ந்திருந்தார்கள் ?
ஒரு தடவை 0-4-9 வசூல் ஆனால் எவ்வளவு பேர் உட்கார்ந்திருந்தார்கள் ?

| | |
|---|---|
| ஒரு தடவைக்கு 0-5-3 வீதம் 5 தடவையில் எவ்வளவு வசூல்? | |
| ஒரு தடவைக்கு 0-4-6 வீதம் 7 தடவையில் | ,, |
| ஒரு தடவைக்கு 0-6-0 வீதம் 3 தடவையில் | ,, |
| ஒரு தடவைக்கு 0-3-6 வீதம் 6 தடவையில் | ,, |
| ஒரு தடவைக்கு 0-3-9 வீதம் 2 தடவையில் | ,, |



கோயில் உற்சவத்தில் சுவாமிக்கு முன் யானை வருவதைப் பார்த்திருப்பீர்கள். யானையை ஓட்டுபவனுக்கு மோவுத்துக்காரன் என்று பெயர். சுவாமி தரிசனம் பண்ணவந்த ஜனங்களில் சிலர் தமது குழந்தைகளை யானையின் மீது ஏற்றி வைப்பார்கள். மோவுத்துக்காரன் குழந்தைகளை ஜாக்கிரதையாய்ப் பிடித்துக் கொள்வான். ஒரு குழந்தையை ஏற்றுவிக்கக் காலணா கொடுக்க வேண்டும். மோவுத்துக்காரன் இவ்விதமாகக் கொஞ்சம் ஸம்பாதிப்பான்.



ஞாபகம் வை

| | |
|---|---|
| ஒரு குழந்தையை ஏற்றி வைக்க சார்ஜ் காலணா | காலணாக்கு ஒரு குழந்தையை ஏற்றி வைக்கலாம். |
| 4 குழந்தைகளை ஏற்றி வைக்க சார்ஜ் ஒரு அணா | ஒரு அணாவுக்கு 4 குழந்தைகளை ஏற்றி வைக்கலாம். |

உதாரணம்


தேர்த் திருநாள் அன்று மோவுத்துக்காரன் குழந்தைகளை ஏற்றி வைத்து ரூ. 2-5-3 சம்பாதித்தான். எத்தனை குழந்தைகளை ஏற்றி வைத்தான் ?

| | |
|---|---|
| ரூ. அ. பை.<br>2—5—3<br>16<br>——<br>32<br>5<br>——<br>37 × 4<br>——<br>148<br>1<br>——<br>149<br>—— | ரூபாயை அணாவாக்கி, 5 அணாவைக் கூட்டிக் கொள் ; அணாவை காலணாவாக்கிக் கொள்ள அணாவை 4 அல் பெருக்கு; 3 பைக்கு 1 காலணா ஆக, 1 காலணாவைக் கூட்டிக்கொள்.<br>விடை 149 குழந்தைகளை ஏற்றி யிருக்கிறான். |

அடியிற் கண்ட கணக்குகளைப் போடு.

ஒரு மோவுத்துக்காரன் 8 நாள் உற்சவங்களில் குழந்தைகளை ஏற்றி வைத்துச் சம்பாதித்த பணம் பின் வருமாறு: ஒவ்வொரு நாளும் எத்தனை குழந்தைகளை ஏற்றி வைத்திருப்பான் ?

| உற்சவ நாள் | சம்பாதித்த பணம் | எத்தனை குழந்தைகளை ஏற்றி வைத்திருப்பான். |
|---|---|---|
| 1 | 0—13—9 | ,, |
| 2 | 1—2—6 | ,, |
| 3 | 1—5—0 | ,, |
| 4 | 1—10—9 | ,, |
| 5 | 2—2—0 | ,, |
| 6 | 2—6—0 | ,, |
| 7 | 1—14—0 | ,, |
| 8 | 1—15—6 | ,, |



## தேர்க்கடை

தேங்காய், பழம், பூ, குங்குமம், கர்ப்பூரம் இங்கு கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| தேங்காய் ஒன்று | விலை | 0—0—9 |
| பழம் 8ன் | ,, | 0—1—0 |
| குங்குமம் பொட்டணம் | ,, | 0—0—3 |
| கர்ப்பூரம் பொட்டணம் | ,, | 0—0—3 |
| புஷ்ப மாலை ஒன்று | ,, | 0—2—0 |

முறையே பின் வருபவைகளுக்கு விலை கண்டுபிடி.

தேங்காய் 1, பழம், 4, குங்குமம் பொட்டணம் 1, கர்ப்பூரம் பொட்டணம் 1,

தேங்காய் 2, பழம் 8, குங்குமம் பொட்டணம் 2, கர்ப்பூரம் பொட்டணம் 2, பூ மாலை 2:

தேங்காய் 3, பழம் 12, குங்குமம் பொட்டணம் 3, கர்ப்பூரம் பொட்டணம் 3, பூ மாலை 2:

தேங்காய் 4, பழம் 8, கர்ப்பூரம் பொட்டணம் 2, குங்குமம் பொட்டணம் 1:

தேங்காய் 3, பழம் 6, கர்ப்பூரம் பொட்டணம் 3, குங்குமம் பொட்டணம் 3, பூ மாலை 3.



திருநாள் பாத்திரக்கடை : பித்தளை, அலுமினியம், ஈயம், மரப்பாத்திரம் முதலியன.

1. பித்தளைப்பாத்திரம், பாத்திரத்திற்குத் தக்கபடிக்கும் அதன் நிறைக்குத்தக்க படிக்கும் விலைமாறும்.
2. அதுபோலவே அலுமினியம் பாத்திரமும் விற்கும்.
3. ஈயப்பாத்திரம் நிறைக்குத்தக்கபடி விலைமாறும்.
4. மரப்பாத்திரம் சாமானுக்குத்தக்கபடி விலையிருக்கும்.

கீழ் கண்ட சாமான்களுக்கு விலை கண்டு பிடி

A. மரச்சாமான்கள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சீயக்காய்மரவை | ஒன்று | 0—3—0 | 5 மரவை |
| 2. | அப்பளக்குழவி | ஒன்று | 0—4—0 | 3 ஜதை |




| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அகப்பைக் கூடு | ஒன்று | 0—3—6 | 7 அகப்பைக்கூடு |
| 4. | பல்லாங்குழி | ஒன்று | 0—5—3 | 5 பல்லாங்குழி |
| 5. | உப்பு மரவை | ஒன்று | 0—7—0 | 4 மரவை |
| 6. | அகப்பை | ஒன்று | 0—0—6 | 25 அகப்பை |
| 7. | ஐந்தறைப்பெட்டி | ஒன்று | 0—8—0 | 3 பெட்டி |
| 8. | முக்காலி | ஒன்று | 0-14—0 | 4 முக்காலி |
| 9. | மத்து | ஒன்று | 0—1—6 | 10 மத்து |
| 10. | கைப்பிடி தட்டு | ஒன்று | 0—2—6 | 8 தட்டு |

B. பித்தளைப்பாத்திரங்கள்

| பாத்திரம் | சேர் ஒன்றின் விலை | பாத்திரத்தின் நிறை | பாத்திரத்தின் விலை. |
|---|---|---|---|
| 1. கும்பகோணம் கங்காளம் | 0—5—0 | 25 சேர் | |
| 2. அண்டா அல்லது ஜோடுத் தவலை பிடியுள்ளது | 0—3—6 | 47 ,, | |
| 3. வெண்கலத்தவலை | 0—4—6 | 22 ,, | |
| 4. பித்தளைத்தவலை | 0—4—6 | 10 ,, | |
| 5. அன்னக்கூடை | 0—5—6 | 12 ,, | |
| 6. இட்டிலிப்பானை | 0—5—6 | 15 ,, | |
| 7. வாளி | 0—4—6 | 11 ,, | |

## பலத்தை வீசை, மணங்கு ஆக்குதல்



I. ஒரு பட்டிணம் படி எள்ளை எண்ணெய் ஆட்டினால் 15 பலம் எண்ணெய் கிடைக்கும்.

33 படி எள் ஆட்டினால் எவ்வளவு எண்ணெய் கிடைக்கும்.

44 படி ,,

55 படி ,,

II. கோயில் உற்சவத்தில் ஒரு தீவிட்டிக்கு 25 பலம் எண்ணெய் வேண்டும்.

10 தீவட்டிகளுக்கு எவ்வளவு வீசை எண்ணெய் வேண்டும்?


12 ,,

15 ,,

20 ,,

III. ஒரு காணம் எண்ணெய் ஆட்டுவதற்கு 15 பலம் வெல்லம் வேண்டும்.

5 காணம் எண்ணெய் ஆட்டுவதற்கு எவ்வளவு பலம் வேண்டும்?
12 ,,
18 ,,
20 ,,
25 ,,



தேர் இழுக்க நூற்றுக்கணக்கான ஆட்கள் வேண்டும். பல பிரபுக்கள் தமது நிலங்களில் வேலை செய்யும் ஆட்களைத் தேர் இழுக்க அனுப்புவார்கள். அவர்களே அவ்வாட்களுக்குக் கூலி கொடுப்பார்கள்.

ஆள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் நெல்லும் ஒரு அணாவும் கொடுப்பார்கள்.


(ஞாபகம் வை. 12 மரக்கால் = 1 கலம்)


சுவாமி தேர் இழுக்க 500 ஆட்கள் வேண்டும்.
அம்மன் தேர் இழுக்க 250 ஆட்கள் வேண்டும்.
சுப்பிரமணிய ஸ்வாமி தேர் இழுக்க 150 ஆட்கள் வேண்டும்.
பிள்ளையார் தேர் இழுக்க 100 ஆட்கள் வேண்டும்.
அடியிற்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லு.

1. எல்லாத் தேர்களையும் இழுக்க எவ்வளவு ஆட்கள் வேண்டும்?

| கூலி கொடுக்க எவ்வளவு நெல் | கலம் | மரக்கால் | எவ்வளவு பணம் வேண்டும். |
|---|---|---|---|
| 2. சுவாமி தேர் ஆட்கள் | | | ரூ. அ. பை. |
| 3. அம்மன் தேர் ஆட்கள் | | | |
| 4. சுப்பிரமணியஸ்வாமி தேர் ஆட்கள் | | | |
| 5. பிள்ளையார் தேர் ஆட்கள் | | | |

வகுப்பு 5.





கோயிலைச் சுற்றி வருதல்

கோயிலினுள் தினசரி பூஜை, அபிஷேகம், தீபாராதனைகள் மூல ஸ்தானத்து விக்கிரகத்திற்கு நடக்கும். ஜனங்கள் தீபாராதனை செய்து அந்த



இடத்தை வலம் வருவார்கள். அந்த மூல ஸ்தானத்தைச் சுற்றியுள்ள நான்கு பக்கங்களுக்கும் "உள் பிரகாரம்" என்று பெயர்.

பிறகு வெளியே வந்து மறுபடியும் கோயிலின் வெளிப்புறத்தைச்சுற்றியும் வலம் வருவார்கள். அந்த நாலுபக்கங்களுக்கும் வெளிப் பிரகாரம் என்று பெயர்.

தேர் இழுத்து வரப்படும் நான்கு தெருக்களுக்கும் தேர் வீதிகள் எனப் பெயர்.

சுவாமி சந்நிதிக்கு எதிரிலுள்ள தெருவிற்குச் சந்நிதித் தெரு என்று பெயர்.

ஞாபகம் வை

ஒரு பக்கம் எவ்வளவு நீளமோ அதே நீளம் தான் அதற்கெதிர் நீளமும்.

ஒரு பக்கம் எவ்வளவு அகலமோ அதே அகலம்தான் அதற்கெதிர் அகலமும்.

உதாரணம்

நான்கு பக்கத்தின் நீளத்தைக் கண்டு பிடி

இரண்டு நீளமும் + இரண்டு அகலமும்

$(54 \times 2)$ அடி $+ (28 \times 2)$ அடி

108 அடி + 56 அடி = 164 அடி

அடி $54 + 54 + 28 + 28 = 164$ அடி

நீளம், அகலத்தை பர், கெஜம், அடியில் கொடுத்துள்ளதை மேலே காட்டிய மாதிரி போட்டுக் கூட்டிப்பார்.


A. சிவன் கோயில்

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| 1. சிவன் கோயில் உள் பிரகாரம் | 54 அடி | 28 அடி ஒரு தடவை சுற்றி வர எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் |
| 2. அம்மன் கோயில் உள் பிரகாரம் | 48 அடி | 20 அடி |
| 3. கோவில் முழுமையும் வெளிப் பிரகாரம் | 175 அடி | 170 அடி |
| | பர். கெ. | பர். கெ. |
| 4. நான்கு தேர் வீதிகள் | 1—180 | 1—176 |

B. சுப்பிரமணிய சுவாமி கோயில்

| | | |
|---|---|---|
| 1. உள் பிரகாரம் | 80 அடி | 58 அடி |
| 2. வெளிப் பிரகாரம் | 95 அடி | 80 அடி |
| 3. தேர் வீதிகள் | 1—185 | 0—182 |

கோயில் உற்சவக் கடைகள்.



உற்சவ காலத்தில் கோயில் சந்நிதியில் சிறு கடைகள் வைக்க கோயிற்காரர்களுக்காவது முனிசிபாலிடிக்காரர்களுக்காவது கொஞ்சம் வாடகை கொடுக்க வேண்டியிருக்கும். அந்த வாடகை இடத்திற்குத் தகுந்தாற்போலும், நாட்களுக்குத் தகுந்தாற்போலும் இருக்கும்.

தினம் ஒன்றுக்கு 9 சதுர அடிக்கு ஒரு அணு வீதம் வாடகை கணக்குப்பண்ணிச் சொல்லு.

உதாரணம்

| வளைக்கடை | நீளம் | அகலம் | நாட்கள் | வாடகை |
|---|---|---|---|---|
| | 9 அடி | 6 அடி | 5 | ? |

வளைச்கடை நீளம் 9 அடி அகலம் 6 அடி

நீ அ

வளைக்கடை $9 \times 6 = 54$ சதுர அடி

நாள் ஒன்றுக்கு 9 சதுர அடிக்கு 1 அணு வாடகை

54 சதுர அடிக்கு $54 \div 9$ சதுர அடி $= 6$ அணு வாடகை

அணு

5 நாட்களுக்கு வாடகை $6 \times 5 = 30$ அணு

= ரூ 1—14—0.


| | நீளம் | அகலம் | நாட்கள் | வாடகை? |
|---|---|---|---|---|
| புஸ்தகக் கடை | 9 அடி | 7 அடி | 3 | |
| அலுமினியம் பாத்திரக்கடை | 9 ,, | 8 ,, | 4 | |
| பொம்மைக்கடை | 9 ,, | 9 ,, | 5 | |
| தேங்காய்ப் பழக்கடை | 9 ,, | 5 ,, | 10 | |
| பேரீச்சம் பழக்கடை | 9 ,, | 4 ,, | 3 | |
| பலாப்பழக் கடை | 9 ,, | 5 ,, | 2 | |
| ரங்கராட்டினம் | 18 ,, | 18 ,, | 3 | |
| பட்டாணிக்கடலை | 9 ,, | 6 ,, | 3 | |



147639
சென்னை-600 008

நான்கு பக்கங்களைப் பலதரம் சுற்றி வருதல்

கோயிற் குளத்தில் தெப்ப உற்சவம் நடக்கிறது. ஜனங்கள் தெப்ப உற்சவம் பார்க்கக் குளத்தைச் சுற்றி வந்துகொண்டிருப்பார்கள். தெப்பம்



JL
T15m21,N36p1
N36.1.3

குளத்தின் ஜலத்தின் மீது நான்கு பக்கமும் சுற்றிக் கொண்டேயிருக்கும். ஜனங்கள் குளத்தங்கரையில் சுற்றிச் சுற்றி வருவார்கள். மிட்டாய் விற்பவன் குளத்தைச் சுற்றிவந்து மிட்டாய்விற்பான்.

பெருமாள் கோயில் குளத்தின் நீளம் 325 அடி அகலம் 215 அடி இதை ஒருதரம் சுற்றிவர எவ்வளவு தூரம் ஆகும்?

தெப்ப உற்சவத்தில் குளத்தங் கரையைச்சுற்றி

| | | |
|---|---|---|
| மிட்டாய்க்காரன் | 3 தடவை | சுற்றினால் நாங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் நடந்திருக்கிறோம்? |
| பேரீச்சம்பழக்காரன் | 5 தடவை | |
| நான் | 6 தடவை | |
| போலீஸ் காரன் | 9 தடவை | |

தெப்பத்தைக்கயிறு கொண்டு இழுக்கிறவன் தண்ணீர்மட்டத்திற்கு மேல் உள்ள படியின்மீது நடந்துவருவான். பலபேர் கயிற்றைப்பிடித்து இழுப்பார்கள். கைவலித்தால் சிலர் மாறி மாறி இழுப்பார்கள்.

ஞாபகம் வை.

கரையின் நீளத்தைவிட தண்ணீர் மட்டத்தின் நீளம் குறைவாக இருக்கும்.

ஒவ்வொரு பக்கத்தின் நீளத்திலும் 30 அடி குறைத்துக்கொள்.

(1) அப்படியானால் ஒருதரம் தண்ணீர் மட்டத்தின் மீதுஉள்ள படி மீது சுற்றிநடந்துவர எவ்வளவு தூரம் நடக்கவேண்டும்.

(2)

| | | |
|---|---|---|
| A. முருகன் | 2 | தரம் சுற்றி வந்தால் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் நடந்து வந்திருப்பார்கள்? |
| B. கண்ணன் | 4 | |
| C. வெங்கடாசலம் | 8 | |
| D. தீவட்டிக்காரன் | 9 | |

மயிலாப்பூர் பெரியகுளம் 632 அடி நீளம், 474 அடி அகலம் உள்ளது

(1) ஒருதரம் சுற்றிவந்தால் எவ்வளவு தூரம் ஆகும்

(2)

| | | |
|---|---|---|
| நான் | ? தடவை | கரையைச் சுற்றிவந்தால் ஒவ்வொருவரும் அன்று எவ்வளவு தூரம் நடந்திருப்பார்கள்? |
| என் தாயார் | 4 தடவை | |
| மிட்டாய்க்காரன் | 5 தடவை | |
| பிச்சைக்காரன் | 7 தடவை | |

# சிசு போஷண பாடசாலை

## (The Nursery School)

பிறந்தது முதலே குழந்தைகள் விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கூடுமென ஆராய்ச்சிக்காரர்கள் கூறியிருக்கிறார்கள். அவைகள் கற்றுக் கொள்ளும் வழியின் உண்மையை அறிய சிசு சம்ரக்ஷணை அதிகாரிகள் முயன்று வருவது பெரிய காரியம். குழந்தையின் வளர்ச்சி முறையையும் அதின் சுபாவத்தையும் கவனித்தல் அவசியமெனத் தெரிய வருகிறது. இரண்டு முதல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைப் பருவம் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. இப்பருவத்தில் குழந்தைகளைச் சரியான பழக்கத்தில் போற்றி வருதல் அவசியமென்று அத்யாத்ம வித்தியா விசாரகர்கள் (Psychologists) கருதுகிறார்கள். இவர்களுடைய அபிப்பிராயம் உண்மை தானென்பது சிசு போஷண பாடசாலையை நடத்திவரும் பெரியோர்களின் அநுபவத்தினின்றும் தெரியவரும். இத்தகைய பாடசாலையின் நோக்கத்தையும், தினசரி நடவடிக்கையையும் உபாத்தியாயர்கள் தெரிந்து கொள்வதால் ஆரம்பப் படிப்பிற்கே சௌகரியமுண்டு.

### குழந்தைப் பருவம் (அதாவது 2 முதல் 5 வயதுவரை) ஓர் முக்கிய காலம்

குழந்தைப் பருவத்தின் முக்கிய அம்சம் சுறு சுறுப்பு. குழந்தையின் வளர்ச்சியே அச்சுறு சுறுப்பிற்குக் காரணம். சிறு குழந்தைகள் முகக் குறியினாலும், சைகையாலும், அபிநயங்களாலும், சத்தங்களாலும் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். குதிப்பதும், துள்ளுவதும், ஓடுவதும் குழந்தைகளின் சுபாவம். இப்படி சுறு சுறுப்பாயில்லாவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி குறைவுபட்டே யிருக்கும். சோம்பலான குழந்தைகளுக்குப் பசி அதிகமிருக்காது. சுறு சுறுப்புள்ள குழந்தைகளுக்கு பசி அதிக மிருக்கும். அக்குழந்தைகள் நன்றாக தூங்குவார்கள். நல்ல ஆகாரம், நல்ல தூக்கம் இவை இரண்டும் வளர்ச்சி உண்டுபண்ணும். தவிர சுறு சுறுப்புள்ள குழந்தை நன்றாக வளர்வதோடு நல்ல ஆகிருதியுடனும் விளங்கும். அதன் எலும்புகளும் தசைகளும் வலுத்திருக்கும். படுக்கையிலேயே இருக்கும் குழந்தைகள் பலஹீனர்களாக இருப்பதைக் கவனித்திருக்கலாம். தவிரவும் இளம் பிராயத்தில் எந்தக் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடுகின்றனவோ அவைகளுக்கு நல்ல மனத்துணிவு உண்டாகின்றது. இம் மனத்துணிவே பிற்காலத்தில் தைரியத்துக்கும் வீரியத்திற்கும் அடிப் படையாக இருக்கின்றது.

இது தவிர, குழந்தைகளின் ஐந்தாம் ஆண்டு நிறைவு முன்னமே, பிற் காலத்தில் தோன்றும் குணங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் போதுமான அஸ்திவாரம் ஏற்பட்டு விடுகிறது. இக்காலம் குணாதிசயங்கள் ஏற்கத்தக்க காலம். இக்காலத்தில் குழந்தை தானாகவே மற்றக் குழந்தைகளைப்



பற்றியும், பெரியோர்களைப் பற்றியும், அதைச் சுற்றுமுள்ளவைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள முயல்கிறது. அப்படித் தெரிந்துகொள்ளும் முறை சோதனை அல்லது பரிக்ஷாத் மகமான முறையே.

ஒவ்வொன்றையும் செய்து பார்த்து அதனால் சந்தோஷத்தைப் பெறலாமா என்று கவனிப்பது குழந்தைகளின் சுபாவம். அவைகள் செய்யும் ஒரு காரியத்தின் பயனாக ஏதாவது தீங்கு நேரிட்டாலோ அல்லது பயம், வருத்தம், துன்பம் ஏதாகிலும் நேரிட்டால் அக்குழந்தைகளின் குணா திசயங்களே மாறிவிடும். ஆகவே குழந்தைகளை வளர்ப்பதில் ஒரு சீரான முறையை அனுசரிக்க வேண்டும். மானிடர்கள் சபல சித்தமுடையவர் களே. குழந்தைகளைச் சுற்றியுள்ள மனிதர்களும் பொருள்களும் ஒழுங்குடையவையாகவும் நம்பக்கூடியவையாகவும் இருப்பது மிகவும் அவசியம். அப்படி இல்லாவிட்டால் குழந்தைகளுக்கு கலக்கமும் கவலையுமே உண்டாகும். குழந்தைகளைச் சுற்றுமுள்ள பொருள்கள், குழந்தைகளுக்கு ஏற்றவாறு சரியான ஒழுங்குடனும், இருப்பது அவசியம்.

தவிரவும் ஒவ்வொரு குழந்தைக்கும் தன் வயதுள்ள குழந்தைகளின் தோழமை அவசியம். இம்மாதிரிக் கூட்டத்தில் வாழ்வதினால் மனிதன் கூடி வாழும் இயல்புள்ளவன் என்றும் தனிப்பட வாழ முடியாதென்றும் குழந்தைகள் தெரிந்து கொள்கின்றன. ஆகவே இந்த இளம் பிராயத்திலேயே குழந்தைகளைச் சரியான்படி வளர்க்கவேண்டும் அப்படிச் செய்வோமானால், அக் குழந்தைகள் வயது முதிர்ந்த பொழுது, நற்குணம் பொருந்தியவர்களா யிருப்பார்களென்று கல்வி ஆராய்ச்சிப் பெரியார்கள் கருதுகிறார்கள்.

### சிசு போஷண பாடசாலை.

முன்னேற்ற மடைந்த மேனாடுகளில் சிறிய குழந்தைகளுக் கென்றே தனிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்களை சிசு போஷண பாடசாலைகள் (Nursery Schools) என்று வழங்குகிறார்கள்.

சென்னையிலும் இம்மாதிரிப் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இப்பள்ளிக்கூடம் சென்ற வருஷம் ஜுலை 15உயன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் 20 குழந்தைகள் இருக்கிறார்கள். இக்குழந்தைகளின் வயது 3 முதல் 5 வரை. இப்பாடசாலையின் முக்கிய நோக்கங்கள்: 1. குழந்தைகளைச் சரசமானதும் சுகாதாரமானதுமான பழக்கங்களில் பயிற்றுவது. 2. முக்கியமாக வேலைக்குப் போகும் தாய்களின் குழந்தைகளுக்கு ஒரு இனிய நல்ல இடம் கொடுப்பது. 3. பெற்றோர்களைக் குழந்தைகள் வளர்ச்சி முறையில் சிரத்தை எடுக்கச் செய்வது 4. சிசு போஷண பாடசாலைகளில் வேலைசெய்ய விரும்பும் ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சி அளிப்பது.

### பள்ளிக்கூடத்தின் முறை

காலை 9 மணிக்குக் குழந்தைகள் வந்தவுடன் சுகாதார சோதனை நடக்கும். பிறகு ஒவ்வொரு குழந்தையும் தன் வீட்டு உடுப்பைக் களைந்து பள்ளிக்கூட உடுப்பைத் தரித்துக்கொண்டு விளையாடுமிடத்துக்குச் செல்லும்.

விளையாட்டுச் சாமான்கள் பலவிதமிருப்பது மல்லாமல் அவைகள் குழந்தைகளுக்கு உற்சாகமும் சந்தோஷமும் கொடுக்கக் கூடியவை. 15 நிமிஷம் விளையாடின பிறகு அவர்கள் திரும்பி வந்து சிற்றுண்டி செய்வார்கள். சிற்றுண்டிக்குப் பழங்கள் அல்லது பழச்சார் கொடுப்பது வழக்கம். பிறகு கதை கேட்பதற்கு உட்காருவார்கள். பாட்டிலும் தாளக் கட்டுள்ள ஆட்டத்திலும் சுமார் ஒரு மணி நேரம் கழிப்பார்கள். சிரிப்புத்தரக்கூடிய கதைகளைக் குழந்தைகளுக்குத் தகுந்தவாறு இங்கு இருக்கும் உபாத்தியாயினி சொல்வாள். அவள் சிசுபோஷண பாடசாலை முறையில் தேர்ச்சி அடைந்தவள். குழந்தைகளிடத்தில் மிக அன்புடனும் எப்பொழுதும் நல்ல குணத்துடனும் நடந்துகொள்வாள். குழந்தைகளுக்கும் அவளிடத்தில் மிக அன்பு உண்டு. பிறகு அவரவர்களுக்கு ஏற்றவிளையாட்டில் 20 நிமிஷ நேரம் பொருந்தியிருப்பார்கள். மணி கோப்பது, கல் அடுக்குவது முதலியன குழந்தைகளுக்குச் சந்தோஷம் தரக்கூடிய விளையாட்டுகள்.

காலை 11-30 மணிக்கு விளையாட்டுச் சாமான்களை ஒழுங்காக அவ்வவ்விடங்களில் வைத்துவிட்டு இக்குழந்தைகள் குளிக்கும் அறைக்குச் செல்வார்கள். அவரவர்களுடைய சோப்புக் கட்டியை எடுத்து முகம் கழுவி, கை கால் அலம்பி, பகல் சாப்பாட்டுக்குத் தயாராவார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தட்டு, ஒரு தண்ணீர்ப் பாத்திரம், ஒரு பாய், ஒரு துண்டு உண்டு; ஒவ்வொரு குழந்தையும் தன் பாயை எடுத்துச் சாப்பிடும் அறையில் தனக்கென்று குறிப்பிட்ட இடத்தில் விரித்து, தண்ணீர்க் கோப்பையில் சுத்தமான ஜலம் எடுத்துக்கொண்டு, தன் அலுமினியத் தட்டை எதிர் வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொள்ளும். சாப்பாடு வரும் வரையில் சந்தோஷமாகப் பேசிக்கொண்டோ பாடிக்கொண்டோ இருப்பார்கள். சாப்பாடு முடிந்ததும் குழந்தைகள் பெரிய அறைக்குச் சென்று தங்கள் பாயை விரித்துச் சற்று நேரம் நித்திரை செய்வார்கள். எழுந்ததும் தோட்டத்தில் சந்தோஷமாக விளையாடி பிறகு ஒரு கோப்பைப் பால் அருந்தி, வீட்டுக்குத் திரும்பத் தயாரா யிருப்பார்கள்.

இப்பள்ளிக்கூடம் ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே அதில் படிக்கும் குழந்தைகளின் உற்சாகமும் ஊக்கமும் அதிகரித்தது கவனிக்கத்தக்கது. தேக ஆரோக்கியத்திலும், ஸ்வதந்திர புத்தியிலும், பிறருடன் கூட வாழும் சக்தியிலும் இச்சிறிய குழந்தைகளிடம் குணத்தைக் காணலாம். இம்மாதிரிப் பள்ளிக்கூடங்கள் அநேகம் நம் நாட்டிற்குத் தேவை. சென்னைப் பள்ளிக்கூடத்திற்கு முக்கியப் பொருளுதவி செய்வது இந்திய செஞ்சிலுவைச் சங்கமே. சென்னையில் இப்பள்ளிக்கூடம், வேபேரி, ரிதர்டன் ரோட், மெதாடிஸ்ட் மிஷன் காம்பௌண்டில் இருக்கிறது. இப்பள்ளிக்கூட அதிகாரிகள் பள்ளிக்கூடத்தின் முறையைப் பார்க்க விரும்புவர்களுக்கு உற்சாகத்துடன் காண்பிக்கத் தயாராக இருப்பார்கள்.

# விளையாட்டிலும் படிப்பு


## குழந்தைகளின் ஒழிவு நேரமும் உல்லாசமான பொழுதுபோக்கும்.

### 3. பக்ஷிகளின் இறகுகளைச் சேகரம் செய்தல்

குழந்தைகளே,

நீங்கள் தினந்தோறும் பல விதமான பக்ஷிகளைப் பார்த்துவருகிறீர்கள். 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்ற பாட்டையும் படித்து இருக்கிறீர்கள். பக்ஷிகளுக்கு அழகைக்கொடுப்பது அவைகளின் இறகுகள் அல்லவா? மயிலின் அழகு அதன் அழகான தோகையினு லல்லவா? நீங்கள் பக்ஷிகளின் இறகுகளையும் சேகரம் செய்யலாம்; தற்செயலாய் கீழே விழுந்து கிடக்கும் இறகுகளை மாத்திரம்தான் சேகரம் செய்யச் சொல்லுகிறேன். பக்ஷிகளைப் பிடித்து வருத்தி இறகுகளைச் சேகரி என்று நான் சொல்லமாட்டேன். அது பாவம்.

கண்டெடுத்த இறகுகளை வரிசைப்பட ஒரு அட்டையில் ஊசி நூல் கொண்டு தைத்துவிடுங்கள். ஒவ்வொன்றும் எந்தப் பக்ஷியினுடையது என்று நன்றாய்ப்படித்தவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். நாளடைவில் பழக்கத்தில் நீங்களே தெரிந்து கொண்டுவிடலாம்.



ஒரு இறகின் பாகங்கள்.

கையில் ஒரு இறகைப்பிடி. நீ பிடித்துக் கொள்ளும் காம்பு பளபளப்பாயும், குழாய் போலக் கெட்டியாகவுமிருக்கிறது. கழுகின் இறகில் இக்காம்பு நல்ல கெட்டியாய் இருக்கும். முன் காலத்தில் அதைச்சீவி எழுதுகோலாக உபயோகித்து வந்தார்கள். சில இடங்களில் இப்பொழுதும் அதை உபயோகித்துவருகிறார்கள். ஆனால் அது அரிதே. இறகின் நடுமத்தியில் ஒரு வரம்பு செல்லுகிறது. அதன் இரு புறங்களிலும் மெல்லிய வழவழப்பான மயிர்கள் காணப்படுகின்றன. இவை எப்படி ஒன்றுக் கொன்று சேர்ந்து இருக்கின்றன பாருங்கள்.

இறகின் உபயோகம்.


இறகுகள் இலேசாய் இருப்பதால் பக்ஷிகள் ஆகாயத்தில் பறக்கின்றன. இவைகளே பக்ஷிகளுக்குப் போர்வைபோல் ஆகின்றன. இவைகளில் ஜலம் ஒட்டிக்கொள்ளுகிறதா என்றுபார். சிலபக்ஷிகள் தண்ணீரில் குளிக்கின்றன. குளித்து விட்டு இறகுகளை அடித்துத் தண்ணீரையெல்லாம் கீழே விழும்படி செய்துவிடுகின்றன. நாட்டு வைத்தியர்கள் மயிலின் இறகைச் சில கஷாயங்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

சில பக்ஷிகள்.

மைனா, மயில், கிளி, சேவல், காக்கை, மரங் கொத்தி, மீன் கொத்தி, புறா, வீட்டுக்குருவி, கொக்கு, வான் கோழி இவை போன்ற பக்ஷிகளின் இறகுகளைச் சேகரம் செய்யுங்கள். சில பக்ஷிகளைப்பற்றிய கதைகளைக்கூட நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

மயிலின் தோகை அழகா யிருப்பதேன்?

நீங்கள் இராவணன் என்ற இராக்ஷஸனைப்பற்றிக் கேட்டிருப்பீர்கள். மனிதர்கள், தேவர்கள், ரிஷிகள் எல்லாரும் அவனிடம் பயந்து நடுங்கிவந்தார்கள்.



ஒருசமயம் இராவணன் ஹிமாலய மலையருகில் வந்துகொண்டிருந்தான். அச்சமயம் அங்கு சில தேவர்கள் ஒரு யாகத்தைக் காண வந்திருந்தார்கள். இராவணனைக் கண்ட இத்தேவர்கள் நடுங்கி பலவாறு தங்களை மாற்றிக்கொண்டனர். தேவேந்திரன் தன்னை ஒரு மயிலாக மாற்றிக் கொண்டான்: இராவணன் சென்றபிறகு தேவர்கள் சுயரூபம் அடைந்தனர். தேவேந்திரனும் தன் சுய ரூபத்தை அடைந்து அம்மயிலுக்கு ஒருவரம்அளித்தான். தான் ஒரு சமயம் ஒரு சாபத்தால் அடைந்த ஆயிரம் கண்களையும் அம்மயிலுக்கு அளிக்க அம்மயில் வெகு அழகாகக் காணப்பட்டது.

இதுபோல் மற்றும் சில கதைகளைக்கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்

பக்ஷிகளைப்பற்றின வேறு விஷயங்கள்.

பக்ஷிகளின் படத்தையும் சேருங்கள். அப்பக்ஷிகளின் ஆகாரம் என்ன, எங்கு வசிக்கின்றன, அவைகளின் அலகு, கால், கால் நகம் இவைகளின் விசேஷம் என்ன? அவை எப்படிக் கத்துகின்றன, பறக்கின்றன, அவைகளின் பழக்க வழக்கங்கள் என்ன?

# கல்விச் செய்தியும் குறிப்பும்

---

நெல்லை ஜில்லா கல்விச் சபைக் கூட்டம்

திருநெல்வேலி ஜில்லா கல்விச் சபையின் கூட்டம் மேமீ 9உ ஸ்ரீ டானியல் தாமஸ் எம். எல். ஸி; தலைமையில் நடந்தது.

பாளையங்கோட்டை செண்ட் சேவியர்ஸ் காலேஜ் வைஸ் பிரின்ஸிபால் ரெவரெண்டு அருள் சாமி-உபதலைவராக, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பெண்களுக்குக் கட்டாயக் கல்வி

திருநெல்வேலி நகர பரிபாலன சபையார், முனிசிபாலிட்டியிலுள்ள முஸ்லிம் பெண் பிள்ளைகள் தவிர மற்ற எல்லாப் பெண் குழந்தைகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி கற்பித்து கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்ததை, முனிசிபல் கமிஷனர், கல்விச் சபைக்குத் தெரிவித்த விஷயம் கவனிக்கப்பட்டது.

இவர்கள் இது சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டனர்.

கடைசியாக ஏகோபித்து, திருநெல்வேலி முனிசிபாலிட்டியில் முஸ்லிம் பெண் குழந்தைகள் உட்பட எல்லாப் பெண் குழந்தைகளுக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி கற்பிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை, மேல் கல்வி யதிகாரிகளுக்கு சபையார் சிபாரிசு செய்தனர்.

---

தொண்டமுத்தூர்

தொண்டமுத்தூர் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கக் கூட்டம் கூடியபோது ஸ்ரீ. முத்துசாமி காரியதரிசியாகவும், ஸ்ரீ. நாராயணசாமி நாயுடு உதவி காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மேற்படி சங்கத்தின் கூட்டம் ஒன்று ஸ்ரீ. ராமகிருஷ்ணய்யர் தலைமையில் கூடியது.

உபாத்தியாயர்களுக்கு 1928ஆம் முதல் சம்பள உயர்வு கிடைக்கவில்லை யாகையால் சம்பள உயர்வை கொடுக்க வேண்டுமென்று ஜில்லா போர்டு பிரசிடெண்டை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானமும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

ஸ்ரீமான்கள் எம். முத்துசாமி, இராமசாமிக் கவுண்டர், கணபதி பிள்ளை, சுந்தரம் பிள்ளை குப்புலிங்கம் முதலியவர்களடங்கிய ஓர் தூது கோஷ்டியார் போர்டு பிரசிடெண்டைக் கண்டு பேச தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர்களின் மேற்படி குறைகளை ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர் சிபார்சு செய்து அனுப்பும்படி அன்னாரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

---

## செங்கற்பட்டு ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம்

செங்கற்பட்டு ஜில்லா போர்டு எலிமெண்டரி ஆசிரியர்கள் சங்கத்தின் 6வது ஆண்டுவிழா சிங்கப்பெருமாள் கோயில் எலிமெண்டரி பாடசாலையில் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ. ஸி. முத்தய்யா முதலியாரின் தலைமையின் கீழ் மேமீ 9வ அதி விமரிசையாக கொண்டாடப்பட்டது.

ஜில்லா போர்டு தலைவர் வந்தவுடன் அவருக்கு மாலை சூட்டி உபசரித்தபின் ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு சங்க வருஷாந்திர அறிக்கை காரியதரிசி ஸ்ரீ. ஆர். சுப்ரமண்ய முதலியாரால் வாசிக்கப்பட்டது. பிறகு பல பாடசாலைகளிலிருந்து வந்த சிறுமிகளும் சிறுவர்களும் பலவித வேடிக்கைகளைச் செய்து காண்பித்தனர்.

பிறகு, செங்கற்பட்டு செயிண்ட் கொலம்பாஸ் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ஜி. வி. ஜோப் "கிராம ஆசிரியரும் பாடசாலையும்," என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார்.

ஆசிரியர்கள் எவ்வாறு கிராம வாசிகளுக்கு உதவிபுரிய வேண்டுமென்பதை எடுத்துரைத்தார். தவிர தாகூரின் சாந்தினி கேதனத்தைப்பற்றி விஸ்தரித்துச் சொன்னார். தலைவர் ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க அவர் பிரயாசைப்பட்டு வருவதாகவும் ஆசிரியர்கள் எல்லோரும் ஆசிரியர்ச் சங்கத்தில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் தங்கள் தொழில் முறையில் வல்லமை பெறக்கூடிய வழிகள் தேடிக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. ஆர். ராமஸ்வாமி அய்யர் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் முடிந்தது.

---

## கைத்தொழில் படிப்புக்கு சர்க்கார் உதவி

நிசவு, தச்சு, பிரம்பு வேலை வகுப்புகள் பாடசாலைகளில் வைப்பதற்காக சில ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பண சகாயம் செய்வதாக சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அப்படி செய்யும் உதவி சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் உத்தம பரிமாணத்துக்கு உட்பட்ட செலவில் பாதியென்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இவ்வருஷம் உதவிபெறும் ஸ்தல ஸ்தாபன உயர்தர பாடசாலைகள் ஏழு. இம்மாதிரியான உதவி, ஸர்க்கார் உதவிபெறும் சில உயர்தர ஆரம்ப பாடசாலைகளுக்கும் கொடுக்கப்படுமென்றும் உத்திரவில் கண்டிருக்கிறது. அவை திருநெல்வேலி மேல் வீரராகவபுரம், பாடசாலை, தூத்துக்குடி தெற்கு சேது தெரு பாடசாலை வாலாஜாபாத் ஹிந்து மத நிசவு பாடசாலை, திண்டிவனம் குஷால் சண்ட் உயர்தர ஆரம்ப பாடசாலைகள்,



## பாலர்களுக்குப் பால் அவசியம்

சிம்லா முனிஸிபாலிடியார் முனிஸிபல் ஆரம்ப பாடசாலைகளில் படிக்கும் 120 மாணவர்களுக்கு தினம் ஒரு பைண்ட் பால் கொடுத்து வருகிறார்கள். மே 25வ யன்று அம் மாணவர்கள் பால் அருந்தும் சமயத்தில் நமது ராஜப்ரதிநிதி லார்ட்லின்லித்கோ அவர்கள் பார்வையிட்டார். அப்பொழுது இந்திய சாப்பாட்டில் மிகக் குறைகள் இருக்கின்றன என்றும் பாலர்கள் வளர்வதற்குப் பால் அவசியமென்றும் கூறினார். தவிர இங்கிலாந்தில் இம்மாதிரி ஏழை மாணவர்களுக்கு பால் கொடுத்துதவுவது வழக்கமென்றும், அவ்விடத்தில் செய்த ஆராய்ச்சிப் பிரகாரம் பால் சாப்பிட்டு வரும் மாணவர்கள் வருஷத்தில் சுமார் 7 பவுன் அதிக கனமும் 2½ அங்குலம் அதிக உயரத்திலும் வளர்வதாகும் தெரிவித்தார்கள்.

---

## தஞ்சை ஜில்லா ஆசிரியர்ச் சங்கம்

இச்சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் 11—6—36ல் மாயவரத்தில் நடந்தது. அவ்வமயம் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாக,

1. லோயர்க்ரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 12 வருஷ சர்வீசு இருந்தால் ஹையர்கிரேட் பரீக்ஷைக்கு, பள்ளிக்கூடத்தில் படிக்காமலே போவதற்கு அனுமதிகொடுக்க வேண்டுமென்றும், 1907 முதல் 1917 வரையில் பயிற்சிபெற்ற லோயர்க்ரேட் ஆசிரியர்களை ஹையர்கிரேடாக மதிக்கவேண்டுமென்றும் இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் சனிக்கிழமை விடுமுறை நாளாக்கப்பட வேண்டுமென்று கல்வி இலாகா அதிகாரியை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

---

## மதிப்புரை

சுகாதார பாடங்கள் : வீரவ நல்லூர் உதவி ஆசிரியா எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியது. விலை அணா 3.

இப் புத்தகம் 3-வது வகுப்புக்கென்று எழுதியுள்ளது. சுகாதார விஷயங்களைப்பற்றி எளிய நடையில் எழுதியுள்ளார். தவிர ஒவ்வொரு பாடமும் அழகிய படங்களைக்கொண்டு விளக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை பாடபுத்தகமாக வைத்துப் போதித்தால் சிறுவர்கள் சுகாதார விஷயங்களை எளிதில் ஊக்கத்துடன் கற்றுக் கொள்வார்கள் என்பதற்கு ஐயமில்லை.

## சென்னை ஜில்லாக்களில் ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகள் ஜனத்தொகையும் முறையே அவர்களுள் ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் சதாம்ச விவரமும்

| ஜில்லா | ஜனத்தொகை ஆண் * 1931 | ஆரம்பப் பாடசாலையில் உள்ள ஆண் குழந்தைகள் † 1935 | ஜனத்தொகை பெண் * | ஆரம்பப் பாடசாலையில் உள்ள பெண் குழந்தைகள் † 1935 |
|---|---|---|---|---|
| மலையாளம் | 1716138 | 14·9 | 181786 | 8·4 |
| திருநெல்வேலி | 987159 | 12·1 | 1059748 | 4·5 |
| சென்னை | 341223 | 11·8 | 306001 | 8·7 |
| கிருஷ்ணா | 635704 | 10·7 | 618504 | 7·7 |
| தென் கன்னடம் | 663950 | 10·6 | 708291 | 4·7 |
| கீழ்க்கோதாவரி | 828489 | 10·0 | 851569 | 5·2 |
| ராமநாதபுரம் | 872177 | 10·8 | 966778 | 2·6 |
| நீலகிரி | 91928 | 9·7 | 77402 | 4·5 |
| மேற்கோதாவரி | 602327 | 9·6 | 620729 | 5·9 |
| கடப்பை | 483914 | 9-6 | 465483 | 2·8 |
| குண்டூர் | 1028993 | 9·3 | 1000667 | 5·1 |
| கர்நூல் | 520238 | 9·4 | 504723 | 3·4 |
| கஞ்சம் | 942544 | 9·2 | 1113624 | 1·9 |
| தஞ்சாவூர் | 1143738 | 8·7 | 1242182 | 2·8 |
| வட ஆற்காடு | 1131610 | 8·5 | 1135379 | 2·5 |
| தென் ஆற்காடு | 1225072 | 7·9 | 1229435 | 2·1 |
| மதுரை | 1081437 | 7·7 | 1114310 | 2·5 |
| செங்கல்பட்டு | 837161 | 7·6 | 817954 | 2·7 |
| விசாகப்பட்டணம் | 1191218 | 7·4 | 1251732 | 1·9 |
| திருச்சிராப்பள்ளி | 934867 | 7·4 | 97837[illegible] | 2. |
| நெல்லூர் | 744322 | 7·3 | 741900 | 3·2 |
| அநந்தபூர் | 539534 | 7·2 | 510877 | 2·2 |
| பெல்லாரி | 493018 | 6·7 | 476756 | 1·8 |
| சித்தூர் | 738325 | 6·4 | 758778 | 2·0 |
| கோயம்பத்தூர் | 1218224 | 5·6 | 1226840 | 2· |
| சேலம் | 1211743 | 4·9 | 1222229 | 1· |

* 1931 ஜனத்தொகை கணக்குப் படி

† 1935 கல்வி இலாகா ரிபோர்ட்ப் படி

# தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

(1928ல் ஸ்தாபிக்கப்பட்டது)

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை, 15—5—1936.

சகோதரர்களே,

சென்ற மாதம் "பாலர் கல்வி"யில் தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில் சேருவதால் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனிகளைக் காட்டிலும் அதிக லாபம் பெறலாம் என்று எழுதினேன். அதற்குக் காரணம் என்ன என்று அறிய நீங்கள் விரும்பலாம்.

1. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் முக்கியமாகச் சில முதலாளிகளால் நடத்த படுகிறபடியால் இவர்கள் தங்கள் பங்குகளுக்கு அதிக லாபத்தை அபேக்ஷித்துப் பெரும் பகுதியான லாபத்தைத் தாங்கள் பங்குகளின் டிவிடெண்டாக (dividend) எடுத்துக் கொள்ளுகிறார்கள். நமது நிதியிலோ சேரும் மெம்பர்களே இதற்கு சொந்தக்காரர்கள். இதனால் உண்டாகும் நன்மைகளை இவர்களே அடைகிறார்கள்.

2. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தங்கள் ஆபீஸ் செலவுக்கும் ஏஜண்ட்களின் கமிஷன் செலவுக்குமாக, அவர்கள் சந்தா வருமானத்தில் நூற்றுக்கு 20 முதல் 40 ரூபாய் வரையில் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்நிதியில் அம்மாதிரி அதிக செலவு கிடையாது. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் போல ஏஜன்டுகள் நியமித்து கமிஷன் ஏராளமாகக் கொடுப்பதில்லை. உபாத்தியாயர்களே தங்கள் நன்மையை நன்கு அறிந்து தாங்களே இதில் வந்து சேருவார்கள் என்ற பூர்ண நம்பிக்கை இருப்பதால் மேற்சொன்னபடி அதிக செலவுகள் நமக்கு இல்லை. நிதியில் விதிக்கப்படும் செலவு தொகை வருமானத்தில் 100க்கு மூன்றே ஆகும்.

3. மற்றொரு முக்கிய காரணம் உண்டு. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் சேருவோர் எல்லா தொழிலும் அடங்கிய பொதுஜன சமூகத்திலிருந்து சேருவதால் அவர்களில் சகஜமாய் வருஷத்தில் 1000த்தில் 13 பேர்கள் இறப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்நிதியிலோ முழுவதும் உபாத்தியாயர்கள் அடங்கியிருப்பதால் மரண விகிதம் மிகவும் குறைவு. உபாத்தியாயர்கள் முக்கியமாய் நல் நடத்தை வாய்ந்தவர்கள். அவர்கள் தொழிலில் அபாயம் இல்லை. தேகத்திற்கு கெடுதலைத் தரக்கூடிய வழக்கங்களற்றவர்கள். இக்காரணங்களால் உபாத்தியாயர்கள் சமூகத்தில் மரண விகிதம் மிகவும் குறைவு.

குறைந்த மரண விகிதத்தாலும் சிக்கன நிர்வாகத்தாலும் இந்நிதியில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைக்காட்டிலும் அதிக தொகை கொடுக்க முடியும்.

விவரங்களுக்கு மேல் கண்டுள்ள விலாசத்திற்கு எழுதிப் பதில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையான,
கௌருவ காரியதரிசி.

# பத்திராதிபர் குறிப்பு

மாகாணக் கல்வி மகாநாடு

இருபத்தேழாவது தென்னிந்தியக் கல்வி மகாநாடு மேமீ 7, 8, 9ந் தேதிகளில் சேலத்தில் கூடிற்று. திவான்பகதூர் S. E. ரெங்கநாதம் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். இம்மகாநாட்டில் ஆரம்பக் கல்வியைப் பற்றியும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையைப் பற்றியும் தீர்மானங்கள் யோசிக்கப்பட்டன. அநேக ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டிற்கு வந்திருந்தனர். ஆரம்ப ஆசிரியர்கள் படும் கஷ்டத்தைத் தெரிந்துகொள்ள மகாநாடு சரியான சமயமாயிருந்தது. கஷ்டத்தைக் கேட்கும்போது மனமுருகாதவரில்லை. போர்டு ஸ்கூல்களில் உள்ள அசௌகரியங்களைத் தடுக்கக் கூடியவரில்லையாவெனக் கேட்போர்கள் பலர். கமிட்டி அல்லது டீசர்—மானேஜர் பள்ளிக்கூடங்களில் உழைத்துவரும் உபாத்தியாயர்களைக் கவனிக்கக் கூடாதாவென்று மற்றொரு பக்கத்தில் கேட்பவர் பலர். அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் விடுதலை யேற்படவில்லையே யென்று ஏங்கினவர்களாக ஆசிரியர்கள் தோன்றினர்.

அக்கிராசனாதிபதியின் தலைமைப் பிரசங்கத்தில் பல விஷயங்கள் அடங்கியுளது. ஆரம்பக் கல்வி சம்பந்தமான அபிப்பிராயங்களை ஆசிரியர்கள் கவனித்தல் அவசியம். நூற்றுக்கு ஏழுபேரே படித்தவரென்றும், சுமார் இருபத்தீராயிரம் கிராமங்களில் பள்ளிக்கூடமில்லையென்றும், பள்ளிக்கூடம் போகும் வயதிற்குட்பட்ட முப்பத்தி மூன்று லக்ஷம் பெண் குழந்தைகளுள் எட்டு லக்ஷம் குழந்தைகளே பள்ளிக்கூடம் போவதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆரம்பக் கல்வி அளவில் வேஸ்டேஜூம் ஸ்டாக்நேஷனும் காணப்படினும், தற்காலம் அதிகாரிகள் அமுலுக்குக் கொண்டுவரயுத்தேசத்திருக்கும் கன்சாலிடேஷன் அல்லது ஒன்று சேர்த்தல் என்னும் யோசனை பயனைக் கொடுக்கக்கூடுமென நினைப்பதற்கில்லையென்று வற்புறுத்துகிறார். இப்போதுள்ள பள்ளிக்கூடங்களை சீர்திருத்தம் செய்வது மாத்திரம் போதாதென்பதும், கட்டாய முறையைக் கொண்டு ஆரம்பப் படிப்பை மும்முரமாய் பரவச்செய்தல் அவசியமென்பதும் அவருடைய கொள்கை.

நூற்றுக்குத் தொண்ணூறு பள்ளிக்கூடங்கள் கிராமங்களில் இருப்பதால், ஆரம்பப் படிப்பு திட்டம் கிராம வாழ்க்கையை அனுசரித்திருப்பது அவசியமென்பது அவர் அபிப்பிராயம். நான்கு வருஷத்தில் ஆரம்பப் படிப்பை முடிக்கக் கூடுமென்றும், கிராமப் பள்ளிக்கூட பாட திட்டத்தில் சுகாதாரம், கூட்டுறவுச் சங்கம், விவசாயம், கிராம பரிபாலனம் முதலிய விஷயங்களின் முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கிறார்.



மேலும் கிராம வாழ்க்கைக்கே உயிரிடமாகப் பள்ளிக்கூடமிருக்க வேண்டுமென்றும் உபாத்தியாயர்கள் கிராம வாசத்திலும் அதின் முன்னேற்றத்திலும் ஈடுபட்டவர்களாயிருத்தல் வேண்டுமென்றும் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. விவசாயச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுவதைக் காட்டிலும் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதே தன் முக்கிய கவலையென்று நம்முடைய வைஸ்ராய் சமீபத்தில் கூறியதை யெடுத்துக்காட்டி, வேண்டியதை காலத்தில் செய்வதே நலமென்று சொல்லியது அக்கிராசனாதிபதியின் சிரத்தையைக் காட்டுவதாகும்.

அக்கிராசனாதிபதி அவர்கள் தம் முடிவுரையில் ஆரம்பாசாரியர்களைத் தென்னிந்தியச் சங்கத்தில் சேர்ந்து ஒத்துழைக்கும்படித் தூண்டினார்கள். கஷ்டங்கள் பல இருந்தாலும் கடமையைச் செவ்வையாய்ச் செய்துவருவதால் பொது ஜனங்களுக்கு நல்ல அபிப்பிராய மேற்பட்டு ஆசிரியர்கள் முன்னேற்றமடையக் கூடுமென்று சொல்லியதை நாம் கவனிக்க வேண்டும். பல குறைகளைச் சங்கத்தின் மூலமாய் நீக்கிக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். மகாநாட்டில் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையைப்பற்றி 22 தீர்மானங்கள் இருந்தன. சம்பளம் மிகச் சொற்பமென்றும், சம்பளம் கொடுபடுவதில்லையென்றும், அநாவசியமாய் மாற்றல் ஏற்படுகிறதென்றும், சர்க்கார் உத்திரவிற்கும் நிபந்தனைக்கும் மாறாக நடவடிக்கைகள் போர்டு ஸ்கூல்களில் ஏற்படுவதாகவும் இத்தீர்மானங்களில் கண்டிருந்தார்கள். பொறுமையோடிருந்தால் குறைகள் நீங்குமென்று சொல்வதற்கு நாவெழும்பவில்லை. ஆங்காங்குள்ள கல்வி இலாகா அதிகாரிகள் உடனுக்குடனே குறைகளை விசாரித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கலாமென்றே நம்புகிறோம். ஆயினும் ஆரம்ப ஆசிரியர்களின் கஷ்டங்கள் நீங்கினதாகத் தெரியவில்லை. கடைசியாக ஆரம்ப ஆசிரியர்களின் பல குறைகளை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு அறிக்கை தயார்செய்து அதை அதிகாரிகளுக்குத் தெரிவித்து கஷ்டங்களை நீக்கும் வழியைத் தேடும் பொறுப்பை தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் காரியக் கமிட்டியே வகிக்கும்படி ஒரு பொது தீர்மானம் மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.

கல்வி இலாகா அதிகாரிகளும் போர்டு அதிகாரிகளும், நாட்டுத் தலைவர்களும் உண்மையை உள்ளபடியே அறிதல் அவசியம். ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களின் சங்கங்களும் தம்முடைய கஷ்டங்களை உள்ளபடியே தென்னிந்திய ஆசிரியச் சங்கக் காரியதரிசிக்குத் தெளிவாக அனுப்பவார்களானல் அறிக்கையைச் சீக்கிரம் தயார்செய்ய முடியும். அநாவசியமான விஷயங்களைக் கலந்து மலையாக விஷயத்தை வளர்க்காது உள்ளதை உள்ளபடியே தெரிவித்தால் காரியங் கைகூடலாம். அதிகாரிகளும் நம் அறிக்கையை ஏற்றுக்கொண்டு சௌகரியங்கள் செய்யத் தயாராயிருப்பார்கள். கஷ்டங்களை நீக்குதல் அதிகாரிகளின் பொறுப்பு. கருமமே கண்ணாயிருத்தல் ஆரம்ப ஆசிரியர்களின் கடமை.

ஸ்தாபிக்கப்பட்டது 1888. டெலிபோன்: 3693.

**ஸீ. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்,**

பப்ளிஷர்ஸ்:

27, சின்னதம்பித் தெரு, சென்னை.

| | | |
|---|---|---|
| | | ரூ. அ. பை. |
| 1. | பாலபோதனு ஆசிரியரின் கையேடு<br>K. துரைசாமி ஐயங்கார் | 0 8 0 |
| 2. | இந்து பாக சாஸ்திரம்<br>T. K. ராமச்சந்திர ராவ் | 2 4 0 |
| 3. | இந்துதேச சரித்திரம் பாகங்கள் I—II<br>(முதலிரண்டு பாரங்களுக்குரியது)<br>C. N. ஏகாம்பர முதலியார் | |
| 4. | பாலாதித்யன்<br>A. S. P. Aiyer, I. C. S. | 2 8 0 |
| 5. | அபிதான சிந்தாமணி<br>A. சிங்காரவேலு முதலியார் | 10 0 0 |


**TRADE PRINTING**

OF Quality that builds up your reputation and brings better results for your clients. Our up-to-date facilities, and the experience gained from helping the Trade for over quarter of a century, ensure an exceptional service at a really reasonable price.

PUT us to the test with your next Job.

WRITE TO US OR PHONE

**THE LIBERTY PRESS**

7, SUNKURAMA CHETTY STREET, G.T., MADRAS

PHONE 2846


A GUIDE TO

**ELEMENTARY SCHOOL TEACHERS**

BY

Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.

with a foreword by

D. S. REDDI, M.A (Oxon)

178-pp. with 45 Illustrations

glish Edition Price Re. 1

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all lementary Schools of the Presidency,

*(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**

EDUCATIONAL PUBLISHERS,

Narasingapuram St., Mount Road,

MADRAS.

*N.B.*—Tamil Edition—in the Press

147639
JL
T15M21, N36PA
N36-1, 3

## வேங்கட்ராம தமிழ் வாசகங்கள் :

(நூலாசிரியர் :—G. தாமோதர முதலியார், B.A., L.T.,
ஜில்லா கல்வித் தலைவர், கர்னூல்.)

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் வகுப்புக்குரியது ... | ... | 0 | 2 | 0 |
| 2-ம் ,, ... | ... | 0 | 3 | 0 |

சென்னை பிரெசிடென்ஸி காலேஜ், தமிழ் பண்டிதர்,
வித்வான் R. விசுவநாதையர் B.A., அவர்கள்
எழுதிய

## தமிழக வாசகங்கள் :

**Approved by the Text-Book Committee, Madras**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழக வாசகம் முதல் புத்தகம் | ... | 0 | 2 | 0 |
| ,, இரண்டாம் புத்தகம் | ... | 0 | 3 | 0 |
| ,, மூன்றும் புத்தகம் | ... | 0 | 4 | 0 |
| ,, நான்காம் புத்தகம் | ... | 0 | 5 | 0 |
| ,, ஐந்தாம் புத்தகம் | ... | 0 | 6 | 0 |

## நீதி கதா வாசகங்கள்

(நூலாசிரியர் :—P. K. ஸ்ரீனிவாஸாசாரியார், தலைமை தமிழ் உபாத்தியார்,
கெல்லட் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.)

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் வாசகம்... ... | ... | 0 | 1 | 6 |
| 2-ம் ,, ... | ... | 0 | 1 | 6 |
| 3-ம் ,, ... | ... | 0 | 1 | 6 |
| 4-ம் ,, ... | ... | 0 | 2 | 0 |
| 5-ம் ,, ... | ... | 0 | 2 | 0 |
| சித்ர பாலசிக்ஷை ... | ... | 0 | 3 | 0 |
| தமிழ் எழுத்துப் படம் ... | ... | 0 | 0 | 6 |
| தமிழ் எழுத்துப் படம் சித்திரப் படங்களுடன் | ... | 0 | 2 | 0 |
| இங்கிலீஷ்—தமிழ் ஒக்கபுலேரி ... | ... | 0 | 1 | 6 |
| நேசர், ஸைன்ஸ், தாவரம், மிருகங்கள் முதலிய சம்மந்தமான இயற்கை, பள்ளிக்கூடங்களுக்குத்தக்க குறிப்புகளுள்ள படங்கள் 32 ஒரு செட் | | 1 | 10 | 0 |
| ,, 40 ,, | | 2 | 0 | 0 |

## வேங்கட்ராமா அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,
4, கார்பரேன் பழக்கடை, மதருஸ்.

## இரக்ஷணைப் படம்—3



புகைவண்டித் தொடர் வரும் சமயத்தில் ஸ்டேஷன் மேடை ஓரத்தில்
நிற்பதினால் அபாயம் நேரிடும். மேடையில் விளையாடுவது
ஒரு அபாயமான பழக்கம்.

## எலிமெண்டரிப் பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 | 2½ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |

### 2-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 | 3 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 | 3½ |

### 3-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 | 4 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 8 |
| சிறுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 4 |

### 4-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 | 4½ |
| விவிக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 | 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 | 4 |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 | 5 |

### 5-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 | 6 |
| இயற்கை அற்புதங்கள் (3-ஆம் புத்தகம்) | 0 | 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 | 5 |
| விவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 | 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 | 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 | 3 |

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,** புத்தக வியாபாரிகள்,
12, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

---

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind. etc.*

| | |
|---|---|
| English Conversation Book I | for Class IV |
| do. do. Book II | do V |
| Arithmetic for Beginners ... ... | in Tamil |
| Domestic Hygiene ... ... | in Tamil |
| Stories from Indian History ... ... | for Class V |
| Tamil Primer for Beginners ... ... | ... |

**For terms, please write for outright purchase of the Copyright of the**

To The Editor of this Magazine or to:

**C. S. RAMASWAMY IYER** *(Retired Teacher)*

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane,**

gd. No. M 3473


# தென் இந்திய ஆசிரியர்

# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள்

ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.
உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காராச்சாரி தெரு,
ருவல்லிக்கேணி, மதரூஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.


l at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, M